REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் : அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

ஆட்சியாளர் கவனத்திற்கு!

கோவை, ஏப். 16—

"ஜப்பானின் மக்கள் தொகை 10 கோடி; அந்த 10 கோடி பேரை மட்டுமே கொண்ட ஜப்பானில் 40 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன!"

"இந்தியாவிலோ மொத்த மக்கள் தொகை 36 கோடி; ஆனால் இந்த நாடு முழுமையிலும் 33 மருத்துவக் கல்லூரிகள்தான் உள்ளன."

இத்தகவலை, கோவை, மணிபால் கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரி ரெஜிஸ்திராரான டாக்டர் டி. எம். ஏ. பாய் தந்துள்ளார்.

மலர் 2] சென்னை: சித்திரை 5உ திங்கள் (18—4—55) ★ ★ வெளியூர் : சித்திரை 6உ செவ்வாய் (19—4—55) [இதழ் 262

'சாதி முறைக்கு—பார்ப்பனரே பொறுப்பு!'

ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு துவக்கம்

பெண் பிரதிநிதிகள் எவருமில்லையென பலருக்கு வருத்தம்

29 நாடுகள் பங்கு பெறுகின்றன

அகில உலகின் பிரதிநிதிகளும் கூடும் ஐ. நா. சபைக் கூட்டமோ என்று ஆச்சரியப்படும் வகையில் இருக்கிறது—ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு; அது, உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் கொண்ட நாடுகளின் பிரதிநிதித்துவம் கொண்டது.

ஆசிய நாடுகளின் தனிப்பெரும் முயற்சியால், அம்மாநாடு நடைபெறுகிறது; அடிமைக் காடுகளாய் விளங்கிய பூமிகள் விழித்துக் கொண்டெழுந்து, வீரத்தோடு போரிட்டு, சுதந்திரம் பெற்றுள்ள பலப்பல நாடுகள் கூடுகின்றன—ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில்.

தங்களின் நிலை உயர, தங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள, தங்கள் பிரச்சினைகளுக்குக் கூட்டுப் பரிகாரம் தேட—என்பதெல்லாம் மாநாட்டின் நோக்கங்கள் என்று கூறப்படுகிறது.

அப்படியெல்லாம் வர்ணிக்கப்படும் ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்துகொள்கிற 29 நாடுகளிலிருந்தும் ஒரு பெண் பிரதிநிதி கூடத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற செய்தி, மாநாட்டில் கலந்துகொண்ட நாட்டவர்களுக்கு வருத்தத்தைத் தந்திருக்கிறதாம்.

பாண்டுங், ஏப். 18—

ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு இன்று இங்கு ஆரம்பமாயிற்று. 29 நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் இங்கு கலந்துகொண்டுள்ளனர்.

பொருளாதார ஒத்துழைப்பு, மனித உரிமைகளும் சுய நிர்ணய உரிமையும், காலனி முறையும் இனத்துவேஷமும், அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துவது, ஐ நா-வில் உறுப்பினராகும் உரிமை, உலக சமாதானம் ஆகிய இந்த பிரச்சினைகளே, மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ளன.

மாநாட்டிற்கு இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் அலி சஸ்திரோமித் ஜோஜோ தலைமை தாங்குகிறார்.

மாநாடு, தனது தீர்மான முடிவுகளையெல்லாம் 'ஒருமித்த' வாக்குகளால் வகுக்குமாம்.

இன்று நடைபெற்ற தலைமைப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் மக்கள் சீனப் பிரதமர் சௌ-என்-லாய் அதிகம் பேசவில்லை என்று தெரிகிறது.

இவ்வளவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு ஜாவாவிலுள்ள மிகக் கீழ்த்தரமான பகுதிகளில் ஒன்றான பாண்டுங்கில் நடைபெறுவதால் மாநாடு முடிவுறும் வரையிலும் அமைதியை நிலைநாட்ட ஏராளமான துருப்புகள் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

இந்த மாநாட்டுக்கு மொத்தம் 9 நாடுகளின் பிரதம மந்திரிகளும், 13 நாடுகளின் அயல் நாட்டமைச்சர்களும், 43 இதர அமைச்சர்களும், மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து 279 தூதுவர்களும் கலந்துகொள்கின்றனர் என்று தெரிகிறது.

80,000 இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம்

இங்கிலாந்தில் போராட்ட சரிதம் வளருகிறது

இங்கிலாந்திலுள்ள இரயில்வே இஞ்சினியர்கள், 'பயர்மென்' ஆகியோர் சுமார் 80,000 பேர், வரும் மே மாதம் 1-ந் தேதி நள்ளிரவு முதல் தங்களின் சம்பள உயர்வு கோரிக்கைக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு தொழிற் சங்கத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்த முடிவு, தொழிற் சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டது என்று சங்கம் அறிவித்துள்ளது.

தாங்கள் தங்கள் சம்பளம் வாரத்திற்கு 8 ஷில்லிங்கு (ரூ 5—5—4) உயர்த்தப்பட வேண்டுமெனக் கேட்டதாகவும், இந்த சம்பள உயர்வுக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இரயில்வே 'டிரிபியூனல்' மறுத்துவிட்டது என்றும் சங்கம் அறிவித்திருக்கிறது.

★

போலீசார்—தொழிலாளர் மோதல்

வேலைநிறுத்தம்செய்த தொழிலாளர் கலைந்து செல்ல மறுத்தனராம்

போலீசார் தடிகொண்டு தாக்கினராம்!

கோலாலம்பூர், ஏப். 16—

பேராக் மாநிலத்தில் உள்ள ட்ரோனோ தகரச் சுரங்கங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதுடன், போலீசாருடன் கைகலப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகவும், அதனால், சுமார் 95 தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்துள்ளதாயும் செய்திகள் கூறுகின்றன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களைக் கலைந்து செல்லுமாறு மூன்று முறை போலீசார் கூறினராம். தொழிலாளர்கள் மறுத்துவிடவே, தடிகொண்டு தாக்க போலீசார் முற்பட்டனராம்; உடனே தொழிலாளர்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களையும், சோடா புட்டிகளையும் கொண்டு எதிர்த் தாக்குதல் நடத்தி போலீசாரின் தாக்குதலை எதிர்த்திருக்கின்றனர். இதன் விளைவாக 4 போலீசார் உட்பட பலர் காயம்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகின்றனராம்.

★

மக்கள் சபையில் குற்றச்சாட்டு!

'ஏட்டளவில் சாதி ஒழிந்தால் போதுமா?— எண்ணத்தில் மாறுதல் வேண்டும்'

புது டில்லி, ஏப். 16—

"சாதிப் பாகுபாடுகளை ஏட்டளவில் ஒழிக்க மட்டுமே இந்த மசோதா பயன்படும்; சாதி இந்துக்களின் மனச்சாட்சியிலிருந்து அந்தப் பாகுபாடுகளை அகற்ற மசோதா பயன்படாது;

"இந்த மசோதா, சர்க்கார் தஸ்தாவேஜுகளில் உள்ள சாதிப் பெயர்களை ஒழிக்க மட்டுமே உதவக்கூடும்; ஆனால், 'நாங்கள் உயர்ந்தவர்கள்,' என்று எண்ணிக் கொண்டிருப்போரின் உள்ளம், இதயம், மனச்சாட்சியிலிருந்து சாதி எண்ணங்கள் மறையவேண்டுமென விரும்புகிறேம்;

"பார்ப்பனர்கள் பூஜை செய்வதற்குமட்டும்தான்—என்று ஆரம்ப காலத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்தார்களென்றால், ஏன் அவர்கள் வேறு பல வேலைகளுக்கு—வர்த்தகம், ஓட்டல் வியாபாரம்—இவற்றிலெல்லாம் ஈடுபட்டார்கள்? கோவில்களிலும், அங்கு நடைபெறும் பூஜைகளிலும் மட்டும் பங்கு பெற்றுக்கொண்டு, அத்துடன் ஏன் நிற்கவில்லை?

"எல்லா வேலைகளையும் இன்று நாட்டில் பார்ப்பனர்கள் தங்களுக்கே ஏகபோகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; அந்தப் பார்ப்பனர்கள்தான், நாட்டில் நிலவும் சாதி முறைகளுக்குக் காரணவான்கள்—வயல்வெளிகளிலும், சாலைகளிலும் வேலை செய்யும் தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல,"

—என்று மைசூரைச் சேர்ந்த காங்கிரஸ்காரரான காச்சையா என்பவர், மக்கள் சபையில், 'சர்க்கார், பொதுக் காரியங்களில் சாதிப் பாகுபாடுகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது,' எனக் கோரும் தனி நபர் மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த விவாதத்தில் கலந்துகொண்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அவரைத் தொடர்ந்து, மத்திய பிரதேச காங்கிரஸ் உறுப்பினரான அனுசூயா பாய் காலே என்ற பெண்மணி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சர்க்காருக்கு உண்மையிலேயே சாதி வேறுபாடுகளை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணமிருந்தால், ஐ. ஏ. எஸ், ஐ பி எஸ். போன்ற உயர்ந்த உத்தியோகங்களுக்கு, சர்க்கார், ஆட்களைத் தேர்ந்தெடுக்கையில், 'அவர்கள், தங்களின் சாதியல்லாத வேறு ஒரு சாதியைச் சேர்ந்தவரைத்தான் மணம் செய்து கொண்டவராக இருக்கவேண்டும்,' என்று விதி வகுக்கவேண்டும்.

"சாதி முறை, சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் வேர்விட்டிருக்கிறது; காங்கிரஸ் கட்சியில் கூட சாதிமுறை இடம் பெற்றிருக்கிறது.

தோழர் வி. வீராசாமி பேசுகையில், "குறைந்தது 10 ஆண்டுகளுக்கு, உயர்ந்த சாதிக்காரர்கள் என்று கூறப்படுவோர், தாழ்ந்தவர் என்று கூறப்படும் சாதியிலிருந்து மணம் செய்துகொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

★

தீண்டாமை ஒழிப்புக்கு மத்திய நிதி உதவி

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்துக்காக பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு 1954—55ம் ஆண்டில், மொத்தம் ரூ. 2,28,000 நிதி உதவியாக வழங்கப்பட்டது.

பலதர பிற்பட்ட வகுப்பினர்களுக்காக மத்திய பாரத் சர்க்காருக்கு 1954—55-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 12,51,000 வழங்கப்பட்டது என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

1,500 மைல் நீளமுள்ள திபேத் — ரைல் பாதை

சைனாவிலிருக்கும் சிங்கியாங் மாவட்டத்திற்கும் — திபெத்திற்கு மிடையே, 1,500 மைல் தூரத்திற்கு 'இராணுவ ஹைவே' பாதை ஒன்று அமைத்து முடிவு பெற்றுவிட்டது என்று தெரிகிறது.

25,000 ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

நியூயார்க், ஏப். 16—

அமெரிக்காவில் நியூஇங்கிலாந்து பகுதியில் உள்ள சுமார் 25,000 ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

நான்கு மாநிலங்களில் உள்ள 23 பஞ்சாலைகளிலும் பணி புரியும் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு, ஜவுளி ஆலைத் தொழிலாளர் சங்கம் கேட்டுக்கொண்டிருந்தது.

தொழிலாளர் சம்பளத்தில் மணிக்கு 10 சதம் குறைப்பதை தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சங்கம் அறிவித்துவிட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட தொழிலாளர்களைக் கேட்டிருந்ததாம்.

பழைய ஆலை ஒப்பந்தங்கள் நேற்று முன் நள்ளிரவுடன் முடிவடைந்தன என்றும், நேற்று சுமார் 37 ஆலைகள், தொழிற் சங்கங்கள் கோரிய வகையில் புது ஒப்பந்தங்களை மேற்கொண்டன வென்றும் தெரிவிக்கப்படுகிறது.

★★

தலைமைக் கழகம் : அறிக்கை—11/55

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

★

அன்புடையீர்!

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

பொருள் :—

1. பொதுச்செயலாளர் தேர்தல்
2. மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தல்

அன்பன்,

"அறிவகம்" சென்னை
14—4—55

சி. என். அண்ணதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—4—'55 திங்கள்

அதுதானே காரணம்?

விவசாயப் பொருள்களின் விலைகள் வீழ்கின்றன—நீருருவி யின் வேகத்தில்! வேதனை குடியேறுகிறது—விவசாயப் பெருமக்களின் உள்ளங்களில்!

விளைவிக்குமுன், விதைவாங்க, நிலத்தைப் பண்படுத்த, உழுது பரம்படிக்க, உரமிட, விதை தூவ, நீர்ப்பாய்ச்சி, களை எடுத்து, காத்து, அறுத்து, களம் சேர்க்கச் செலவிட்ட தொகையோ ஏராளம்! இத்துடன், தானும், தன் குடும்பமும் சிந்திய வியர்வைத் துளிகள் ஏராளம்! இத்தனைக்கும் பலனாகக் கிடைக்கும் பொருளின் மதிப்பு, செலவு செய்த தொகையையும் சரிக்கட்டக் கூடியதாயில்லை என்பது வேதனையிலும் வேதனையானதாகும்; விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் எண்ணற்ற தொழிலாளர்களை வாழ்விழக்கச் செய்யும் வேதனையாகும்!

விவசாயிகளின் உழைப்பின் விளைவு, உலக மக்களுக்கு உயிர் தரும் உணவாகும். அந்த உணவுப் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பெருமக்களுக்குரிய பிரச்சினைகள் இந்த நாட்டில் நாள்தோறும் வளர்ந்து வருகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், 'விவசாயப் பொருள்களின் விலை வீழ்ச்சி,' என்ற சோகச் செய்திகள் இருக்க முடியும்.

சென்ற ஆண்டு முன்புவரை, தென்னாட்டு விவசாயிகளுக்கு இருந்த பிரச்சினை, 'மழை இல்லை; அதனால் நீர்ப்பாசனம் இல்லை; விவசாயமில்லை; விளைச்சலில்லை;—விளைவு, வேதனை, வேதனை'—என்பது.

இப்போது, விவசாயப் பெருமக்களுக்குள்ள பிரச்சினை—'மழை பெய்தது. ஓரளவேனும்; நிலம் பலன் தந்தது, சிறிதேனும்; ஆனாலும் செலவிடப்பட்ட தொகைக்கும், சிந்திய வியர்வைக்கும் பலன் கிடைக்கவில்லை. உழைப்பின் விளைவுகள்—விவசாயப் பொருள்களின் விலைகள் வீழ்ந்து வருகின்றன. விதை வாங்கிய செலவுகூட சரிக்கட்டப்பட முடியவில்லை; வேதனை, வேதனை' என்பது.

இப்படி, 'மழை பெய்யாமலிருந்தாலும் வேதனை; மழை பெய்தாலும் வேதனை'—என்ற அவல நிலையில் விவசாயப் பெருமக்கள் எத்தனை நாட்களுக்குத்தான் இருக்க வேண்டி வருமோ?

விலைகள் வீழ்ந்துவிட்டதற்குக் காரணம் விவசாயப் பொருள்கள், நாட்டு மக்கள் அத்தனை பேரின் முழுத் தேவைக்கும் அதிகமான அளவு உற்பத்தி செய்யப்பட்டுவிட்டதினால்தான் என்று, நாடாள்வோர்கூடத் துணிந்து கூறிவிட மாட்டார்கள்.

நாட்டு மக்களில் பெரும்பாலானோர், இன்னும் வயிறார உணவு பெறாதவர்களாக—பெற முடியாதவர்களாகத்தானிருக்கிறார்கள் என்பது உண்மை.

அதனால்தான், கடந்த பஞ்ச நிலை நிலவிய ஆண்டுகளில் உற்பத்தியானதைவிட சிறிதளவு அதிகம் உற்பத்தியானாலும்கூட, நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, அவர்கள், தங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிற நிலை பெறுமலிருக்கும் காரணத்தால், உற்பத்தியான சிறிதளவு உணவுப் பொருளுங்கூட, மக்களிடையே, வாங்குவார் குறைந்துள்ளமையால், மதிப்பிழந்துவிடுகிறது — விலைகள் வீழ்கின்றன. இன்றியமையாதனவற்றுள் ஒன்றான உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும்போதே, அந்தப் பொருள்களைத் தாராளமாக தேவையான அளவு வாங்கி உபயோகிக்க வேண்டிய நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையும் உயர்ந்தாகவேண்டும். அப்போதுதான், அந்தப் பொருள்கள் மதிப்பிழக்க மாட்டா. மேலும், நாட்டுமக்களின் பரிபூரணத் தேவை பூர்த்தியான பின்னும் உணவுப் பொருளின் உற்பத்தி ஏறுமுகத்திலிருந்தால் நியாய விலைக்கு தேவை எனக் கேட்கும் வெளிநாடுகளுக்குத் தரலாம்; பண்டமாற்று செய்யலாம். இது, நிரந்தரமான ஒரு ஏற்பாடாகும்.

இந்த நிரந்தரமான ஏற்பாட்டினைச் செய்ய, இப்போதுள்ள மாதிரி சோஷியலிச ஆட்சியாளர்களால் முடியுமென நாம் கருதவில்லை! நாட்டு மக்களும், செய்வார்கள் என நம்பவில்லை.

இப்போது விவசாயப் பொருள்களின் விலைகள் வீழ்ந்திருப்பதற்கான காரணம், அந்தப் பொருள்களில் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் அதிக உற்பத்தி என்பதைக் காட்டிலும், 'நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் படுமோசமாகியிருக்கிறது; வாங்கும் சக்தி மிகக் குறைந்து விட்டிருக்கிறது,' என்றே நாம் துணிந்து கூறுகிறோம்.

நாம் கூறிய நிரந்தரமான ஏற்பாடு, 'ஏக இந்தியா' பெயரால் வடநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கான வழிவகைகள் வெகு வேகமாகச் செய்யப்பட்டு வருகின்றன என்பது உலகம் கவலையுடன் உற்று நோக்கிக்கொண்டிருக்கும் உண்மை.

ஒரு தற்காலிக ஏற்பாடு விலை வீழ்ச்சியைத் தடுக்கச் செய்தாக வேண்டும், ஆட்சி பீடத்திலிருப்போரால்.

'வடநாட்டில் கோதுமையின் விலை வீழ்ந்துவிட்டது,' என்ற செய்தி கேட்ட இந்தியப் பேரரசு துடித்திருக்கிறது. தன்னிடமுள்ள, கோதுமையை 'மார்க்கட்'டிற்கு அனுப்பாது என்றும், விவசாயிகளிடமிருக்கும் கோதுமையை, மாநில சர்க்காரே மத்திய சர்க்காருக்காக, நியாயமான ஒரு விலைக்கு வாங்குவதற்காக வடநாட்டில் உள்ள பெப்சு, இராஜஸ்தான், பீகார், முதலிய சில மாநிலங்களுக்கு சில கோடி ரூபாய் கடன் தர சம்மதம் தெரிவித்திருப்பதாயும் செய்திகள் கூறுகின்றன.

பம்பாய் சர்க்கார், மணங்கு 10 ரூபாய் விதம் கோதுமையை விவசாயிகளிடமிருந்து விலைக்கு வாங்க முற்பட்டிருப்பதாயும் தெரிய வருகிறது.

தென்னாடு வழக்கமான தென்னாடாகத்தான் இருக்கிறது. இங்கு நெல் விலைச் சரிவால் நஷ்டப்பட்டு, கஷ்டங்கள் பல அனுபவிக்கும் விவசாயியின் வேதனை, சென்னை சர்க்காரிலமர்ந்திருக்கும் 'ஏக இந்தியா'க்காரர்களுக்குத் தெரியவில்லையா? இவர்களுக்கே தெரியாதிருந்தால், 'ஏக இந்தியா'வால் ஏகபோக கொள்ளையடித்துக்கொண்டிருக்கும், அந்த வடநாட்டு எஜமானர்களுக்கு மட்டும் எங்கே தெரியும்?

இத்தகு சிறு சிறு பிரச்சினைகளில் கூட தென்னாட்டவர் துயர் துடைக்க முன்வரும் மனம் வடநாட்டவருக்கிருக்கவில்லை என்பதைத் தவிர, நம்மால் வேறெதுவும் இதற்கு காரணமாகக் கூறமுடியவில்லை.

உலக மக்கள் தொகை 254 கோடி!

1953-ம் ஆண்டில், உலகத்தின் மொத்த மக்கள் தொகை, 54.7 கோடி என்று ஐ. நா.—வைச் சேர்ந்த நிபுணர்கள் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இந்தியாவில் உள்ள அந்நிய நிறுவனங்கள்

இலாபமும் முதலீடும் பற்றிய விபரங்கள்

1954-ம் ஆண்டில், இந்தியாவில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களாலும், பாங்கிகளாலும் பல்வேறு வெளிநாடுகளுக்கு 19,22,02,000-ரூபாய் அனுப்பப்பட்டது என்றும், 1953-ம் ஆண்டில் ரூ. 16,67,29,000 மட்டுமே அனுப்பப்பட்டது என்றும் நிதிமந்திரி தேஷ்முக் டில்லி மேல் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தகவல் தந்திருக்கிறார்.

1953-ம் ஆண்டில், வெளிநாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் ரூ.-1,53,60,000 முதலீடு செய்தன: ஆனால், 1954-ல், ரூ 59,39,000-மட்டுமே முதலீடு செய்தன!

மன்னராயில்லாத நிஜாமிடம்......!

ஐதராபாத் ராஜப் பிரமுகரான நிஜாமிடம் 36 கார்கள், எழு பஸ்கள், சாமான் ஏற்றிச் செல்லும் இரு லாரிகள், ஒரு ஆட்டோ ரிக்ஷா ஆகியவை இருக்கின்றன என்றும், இவற்றிற்கு மோட்டார் வாகன வரி விதிப்பு கிடையாதெனவும், இணைக்கப்பட்ட சுதேச சமஸ்தானாதிபதிகளின் வாகனங்களுக்கு இம்மாதிரி வரிகளிலிருந்து விலக்களிக்கப் பட்டிருப்பதாயும், சட்டசபையில் உதவி உள்நாட்டு மந்திரி சீனிவாச ராவ் கூறியிருக்கிறார்.

நேபாள — அமெரிக்க கூட்டுறவுத் திட்டம்

நேபாளம்—அமெரிக்கா ஆகிய நாடுகள், சுமார் 26 தொழில்நுட்ப கூட்டுறவுத் திட்டங்களுக்கான ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டுள்ளன என்று தெரியவருகிறது.

இதில் அமெரிக்கா தன் பங்கிற்கு சுமார் 8 லட்சம் டாலரும்; நேபாளம் தன் பங்கிற்கு இந்தியச் செலாவணியாக ரூ. 18,33,090; நேபாளச் செலாவணியாக ரூ. 5 லட்சமும் முடக்கியுள்ளன என்று தெரியவருகின்றது.

இவைகூட 'அங்கே'தானே?

3 இயந்திர வார்ப்பட ஆலைகள் 'இந்தியா'வில் துவங்கப்படுமாம்

மேலும் 3 சோடா உப்புத் தொழில்களும் ஆரம்பமாகும்

மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவிப்பு

இந்தியத் துணைக் கண்டத்தின் வெவ்வேறு பாகங்களில் மூன்று வார்ப்பட தொழிற் சாலைகள் (பவுண்டரிகள்) துவங்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாக கைத்தொழில் வர்த்தக மந்திரி டி டி கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

தனிப்பட்டவர்களோ அல்லது சர்க்காரோ அல்லது இரு சாராரும் சேர்ந்தோ அத்தொழிற்சாலைகளை அமைக்கலாம் தனிப்பட்டவர்கள் கூட்டுச் சேர முன்வராவிடில் சர்க்காரே அவைகளைத் துவங்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தனது இலாகா சம்மந்தப்பட்ட சுமார் 82 கோடி ரூபாய் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இத்தகவலை அவர் வெளியிட்டிருக்கிறார்.

இந்த 'பவுண்டரி'கள் பெரியனவாக இருக்கும் என்றும், தனிப்பட்ட தயாரிப்பாளர் எவர் வேண்டினாலும், 'டிஸைன்கள்' கொடுத்து தங்கட்கு வேண்டியதை அங்கு தயாரித்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் 'டிஸைன்கள்' அங்கு இரகசியமாக வைத்திருக்கப்படும் என்றும் டி. டி. கே. தெரிவித்திருக்கிறார்.

மேலும், 'மூன்று புதிய சோடா உப்பு தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது; ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் பெரிதாக்கப்பட்டு வருகின்றன; சோடா உப்பு பிரச்சினையில், விரைவில் சுயநிறைவு அடைந்து விடுவோம்,' என்றும் டி. டி. கே குறிப்பிட்டிருக்கிறார்.

புதியதாக ஒரு சாயத் தொழிற்சாலையை ஆரம்பிக்க, நேச நாடு ஒன்றின் நிபுணர் ஒருவரது உதவியைப் பயன்படுத்திக்கொள்ளவும் சர்க்கார் எண்ணியிருப்பதாகத் தகவல் தந்திருக்கிறார் திரு டி. டி கே.

இந்தியாவில் மோட்டார் கார் தொழில் நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கிறது; கார் விலைகளை $7\frac{1}{2}$ சதவிகிதம் குறைத்துக் கொள்ள உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்; கார் இயந்திரத்திற்குத் தேவையான தனி உறுப்புகள் (ஸ்பேர் பார்ட்ஸ்) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

குடிசைத் தொழில்களுக்கு இந்திய சர்க்கார் உதவி

வீடு கட்டும் செலவில் கால்பாகம் இலவச மானியமாம்!

"குடிசைத் தொழில்களுக்கு உதவி செய்ய இந்திய சர்க்கார், மாநில சர்க்கார்கள் மூலம் ரூ 70 லட்சம் கடனாக வினியோகம் செய்துள்ளனர்; கிராமப்புறங்களில், சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்திற்கு உதவி செய்வதெனவும் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

"இவ்வுதவி முதன் முதலாகக் கைத்தறி நெசவாளர்களுக்கே அளிக்கப்படுகிறது. அவர்களுக்கென கட்டப்படும் வீட்டின் கிரயத்தின் கால் பகுதியை சர்க்கார் இலவச மானியமாகவும், பாதித் தொகையை நீண்டகாலக் கடன் தவணைகளிலும் கொடுக்க உத்தேசித்துள்ளது" என்று, டில்லி மக்கள் சபையில் வர்த்தக இலாகா உதவி அமைச்சர் கனுங்கோ கூறியிருக்கிறார்.

'உடன்கட்டை ஏற முயன்ற உத்தமி'

தடுத்து நிறுத்தினர் போலீசார்!

குவாலியர்—

தன் கணவன் இறந்துபட்டதும் தானும், அவனுடன் உடன்கட்டை ஏற முயற்சித்த மனைவியைப் போலீசார் தடுத்திருக்கின்றனர்.

மொரேனா மாவட்டத்தில் உள்ள புதாரா எனும் கிராமத்தைச் சேர்ந்த, சர்மான் எனும் ஆடு மாடடிப்போன் நோய்வாய்ப்பட்டு இறந்துபட்டானாம்; அவன் எரிக்கப்படவிருந்த சிதையில் தானும் 'உடன்கட்டை' ஏற அவன் மனைவி முயற்சித்தாராம்; தகவலறிந்த போலீசார் தக்க தருணத்தில் இடுகாடு சென்று, அப்பெண்மணியின் அறியாமை எதிரொலிக்காமல் தடுத்திருக்கின்றனர் என்று அதிகாரபூர்வமான செய்தி ஒன்று கூறுகிறது.

ஆகாகான் பெற்று வந்த 'அலவன்ஸ்'

'தேவையில்லை' என அறிவித்துவிட்டாராம்!

கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆகாகான் செய்துவந்த பெருந்தொண்டுகளைப் பாராட்டி, வெள்ளை சர்க்கார் அவருக்கு மாதா மாதம் அளித்துவந்த குடும்ப அலவன்ஸ் தொகையான ரூ. 1000-த்தையும், வேண்டாமென்று கூறி மறுத்துவிட்டதாக, மக்கள் சபையில், உள்நாட்டு துணை அமைச்சர் பி. என். தாதர் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் சர்க்காரால், இந்த அலவன்ஸ் (உபகாரச் சம்பளம்(1944-ம் ஆண்டு முதற்கொண்டே கொடுத்துவரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஜனவரித் திங்களில்தான் அவர் இந்த உபகாரச் சம்பளம் வாங்குவதைத் தாமாகவே நிறுத்திக் கொண்டுவிட்டார்.

அவருக்கு அளிக்கப்பட்டு வந்த குடும்ப அலவன்ஸ் தொகை ரூ. 1,000 தானென்றாலும், மாதா மாதம், வருமான வரி, மற்றுமுள்ள எல்லா வரிகளும் வெட்டப்பட்டு மொத்தமாக ரூ 100தான் பெற்று வந்தார் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ஆகாகானுக்கு வேறு நில மானியங்கள் ஏதும் கொடுக்கப்பட்டுள்ளதா என்று தமக்குத் தெரியாதென்றும் கூறினார்.

தென்னாட்டில் கம்பளித் தொழிற்சாலை

வடஆற்காடு மாவட்டத்திலுள்ள விண்ணமங்கலம் எனுமிடத்தில் சென்னை — மைசூர் ஆகிய இரு மாநில சர்க்கார்களும் கூட்டாகச் சேர்ந்து கம்பளித் தொழிற்சாலை நிறுவுவதற்கான திட்டம் ஒன்றிற்கு மத்திய சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளதாக டெல்லி மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்சாலைக்கான இயந்திரத்தின் செலவு ரூ 5,90,000 ஆகுமென்றும், திட்டத்திற்கு மொத்தமாக ரூ. 11,30,000 செலவாகலாமென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீடான இத்தொகையில் 3-ல் 1 பகுதியை மத்திய சர்க்காரும், மீதி இரு பகுதியையும் மேற்கண்ட இரு மாநில சர்க்கார்களும் பாதிப் பாதியாகவும் ஏற்றுக்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கழகச் செய்திகள்

புதுப்பட்டி தி. மு. கழக ஆண்டுவிழா

8—4—55ல், இவ்வூர் தி. மு கழக ஆண்டுவிழா நடைபெற்றது. அன்று காலை தோழர் ம. கோவிந்தராசு தலைமையில் கொடியேற்று விழாவும், பிற்பகல் 4 மணிக்கு ஏழைகளுக்கு அன்னம் வழங்குதலும், மாலை 6 மணிக்கு தோழர் கா. சின்னசாமி தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். வி. நடராசன், தி. வி. முத்துகிருட்டிணன் ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். இரவு 10 மணியளவில் கழகத் தோழர்களால் 'பரப்பிரம்மம்' நாடகம் நடத்தப்பட்டது.

கீழப்பெரும்பள்ளத்தில் தி. மு. க. பொதுக்கூட்டம்

7—4—55 மாலை 6½ மணிக்கு தோழர் என் கிட்டப்பா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. எஸ். சவுந்திரபாண்டியன் ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.

வால்பாறை வட்டார தி. மு. கழக செயற் குழு கூட்டம்

3—4—55 பகல் 1 மணிக்கு, வால்பாறை வட்டார தி. மு. கழகச் செயற்குழு கூட்டம், தோழர் இரா. பிச்சமுத்து தலைமையில் நடைபெற்றது ஏப்ரல் திங்கள் இறுதிக்குள் இங்கு ஒரு பிரச்சாரக் கூட்டம் நடத்துவதென்றும், ஆனைமலை பிரதேசத்திலுள்ள கிளைக் கழகங்கள் கூடி வால்பாறை வட்டாரமாக அமைத்து, கோவை மாவட்டக் கழகத்தின் ஆதரவுடன் கழக வேலை செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஏரல் தி. மு. கழகம்

11—4—55 இரவு 10 மணிக்கு தோழர் இரா. பால்ராசு தலைமையில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி பேசியபின், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வடநாடு தென்னாட்டைசுரண்டி வாழ்வதைக் கண்டித்துப் பேசினார்.

வல்லநாடு தி. மு. கழகம்

12—4—55 இரவு 7½ மணிக்கு வ. உ. சி திடலில், தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், எஸ். கந்தசாமி பேசியதும், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'சமுதாயம்' என்பது பற்றியும், 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டியதின் அவசியம்' குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

பம்பாய்-கொலாபா தி. மு. கழகம்

11—4—55 காலை 9½ மணிக்கு கூபரேஜ் திடலில் தோழர் இராகவன் தலைமையில் நடைபெற்ற கழக மாதாந்திரக் கூட்டத்தில், கழக வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. கழகத்தின் வளர்ச்சி குறித்துத் தோழர்கள் ஏ. எஸ் தாஸ், க. சு. செகநாதன், எஸ். பி. பெருமாள், கே. கே. இராமநாதன், எஸ் கே. ராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கழக அலுவலக முகவரி மாற்றம்

பெங்களூர், சீராம்புரம் தி. மு. கழகப் பணிமனை 6-வது கிரூஸ் ரோட், சீராமபுரம் அஞ்சல், பெங்களூர்—3. என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதென் அறிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகப் பொதுக் குழு

3—4—55 மாலை 3 மணிக்கு தோழர் சிவ. சண்முகசுந்தரன் தலைமையில் நடைபெற்றது. 13-10-49 முதல் 1-4-55 வரையுள்ள வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. இராமநாதபுரம் மாவட்ட மாநாட்டுச் சொற்பொழிவுகளை புத்தக வடிவில் வெளியிடுவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் செயலாளர், இதுவரையில் தம்முடன் ஒத்துழைத்த தோழர்களனைவருக்கும் நன்றி செலுத்திக்கொண்டார்.

பம்பாய்-தாணு தி. மு கழகம்

8—4—55 மாலை 6 மணிக்கு தோழர் வைதீகசங்காரன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், கழக வரவு—செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர், தோழர் இரா. சம்பிநாராயணன் சொற்பயிற்சி மன்றப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழக ஆண்டு விழாவை விரைவில் நடத்துவதென்றும்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

வேலூர் அரசமரப் பேட்டை தி. மு. க. இளைஞர் கழக ஆண்டு விழா 3—4—55 மாலை தோழர் செல்வமணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள். வே. அ. இளஞ்செழியன், வே. சு. பாண்டியன், ஆ. மணிஎழிலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தென்னூர்:— 14—4—55 மாலை தோழர் சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கருத்தோவியன், ஆ. மணிஎழிலன் ஆகியோர் 'தி. மு. கழகத்தின் கடந்த கால போராட்டங்கள்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

சாத்தான்குளம் தி. மு. கழகம்

11—4—55 இரவு 7 மணிக்கு, காந்தி மைதானத்தில், தோழர் எஸ். சண்முகம் குலசேகரன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் பெ. ராஜமாணிக்கம் தி மு. கழகம் மக்களுக்குச் செய்த நன்மைகளையும், நடைமுறையில் செய்துவந்த போராட்ட விபரங்களையும் எடுத்துரைத்தார். பின்னர் தோழர் ஈ.வெ. கி. சம்பத் அவர்கள் கழக வரலாற்றை விளக்கியும், டில்லி சர்க்காரின் வஞ்சகப் போக்கை அம்பலப்படுத்தியும், ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னாட்டைப் புறக்கணிக்கும் வடநாட்டவரின் எதேச்சாதிகாரப் போக்கை தக்க புள்ளி ஆதாரங்களுடன் விளக்கியும்சொற்பொழிவாற்றினார்.

சோழவந்தானில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

11—4—55ல், தோழர் மா. வேலன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மதுரை எஸ். முத்து, எம். எஸ். ராமசாமி, செங்குட்டுவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முத்துப்பேட்டையில் தி. மு. க. பொதுக்கூட்டம்

11—4—55-ல் ஏ. எஸ். என். திடலில், தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ந. தருமலிங்கம், இரா. நடராசன், வ. மோகன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் ஆ மீ. அலிசேக்மன்சூர் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

செய்திச் சுருள்

கைத்தறி நெசவாளர் சங்கப் பொதுக் கூட்டம்

சங்கரநயினார்கோவில், ஏப். 16—

6—4—55 இரவு 9 மணிக்கு புளியங்குடி பஞ்சாயத்துக் குழுத் தலைவர் தோழர் எஸ். சோமு தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சங்கரசுப்பிரமணியம், அ. நாராயணன் (தி. மு. க.) இரா. பழனிவேலு, மற்றும் பலர் நெசவாளர் நிலைமை பற்றிப் பேசிய பின்னர், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் 5 உறுப்பினரடங்கிய தூதுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவினர், 'மாஸ்டர் வீவர்'களைப் பேட்டி கண்டு நெசவாளர்களுக்குக் கூலி உயர்த்தித் தரும்படி கேட்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

9—4—55-ல், தூதுக் குழுத் தலைவர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம், மற்றும் நான்கு தூதுக் குழு உறுப்பினர்களும் நகரில் உள்ள எல்லா 'மாஸ்டர் வீவர்'களையும் நேரில் சந்தித்து, நெசவாளர் நிலையை விளக்கிக் கூறி, கலர் பொந்துபாவுக்கு ரூ. 22 கூலியும், அதோணி பாவுக்கு ரூ. 18 கூலியும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின்பேரில், 'மாஸ்டர் வீவர்'களும் ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

14—4—55 மாலை, 'மாஸ்டர் வீவர்'கள் தங்கள் சங்கக் கூட்டத்தைக் கூட்டி, பொந்து பாவு ஒன்றுக்கு ரூ. 19 என்றும், அதோணி பாவுக்கு ரூ. 16-ம், பாவு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கூலி உயர்த்தி இருக்கிறார்கள்.

மேலும் கூலியை உயர்த்த வேண்டுமென்று கோரி நகர தி.மு. கழகம் போராடி வருகிறது.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

கோடைக்கானலில் முகாம்

தமிழ் எழுத்தாளரிடையே நெருங்கிய தொடர்பும், நட்புறவும் ஏற்படுத்த தமிழ் எழுத்தாளர் சங்கம் இவ்வாண்டு மே திங்கள் முதல் வாரத்தில், கொடைக்கானலில் ஒரு முகாம் நடத்தும்.

தமிழ் எழுத்தாளர்கள் கொண்ட உல்லாசப் பிராயணக் குழு ஒன்று சென்னையிலிருந்து சென்று இதில் கலந்து கொள்ளும். மற்ற மாவட்டங்களிலுள்ள தமிழ் எழுத்தாளர்களும் இந்த முகாமில் வந்து கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முகாமில் கலந்து கொள்ள விரும்புபவர்களும், உல்லாச பிரயாணக் குழுவில் சேர விரும்புபவர்களும் ஏப்ரல் 25-ந் தேதிக்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளுமாறு கோரப்படுகிறார்கள். மற்ற விபரங்களுக்கு 'க. சோமசுந்தரம், காரியதரிசி, தமிழ் எழுத்தாளர் சங்கம், இளம்பிறைச் சங்கக் கட்டிடம் சென்னை-2' என்ற முகவரிக்கு எழுதலாமென்றும், நேரில் சந்திக்க விரும்புவோர் தினமும் காலை 11 மணி முதல் 12-15 வரை காரியதரிசியை சங்கக் காரியாலயத்தில் சந்திக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காசிபுரம் மீனவர் கடன் கூட்டுறவுச் சங்கம்

14—4—55 காலை 9 மணிக்கு, சென்னை இராயபுரம் காசிபுரத்தில் தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில் மேற்படி சங்கத்தின் புத்தாண்டு விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. அதுசமயம் 1,000 ஏழை மீனவர் பிள்ளைகளுக்குப் பால் வினியோகிக்கப்பட்டது.

பெங்களூர் திருக்குறள் மாநாடு

"மே திங்கள் 14, 15-ந் தேதிகளில் பெங்களூரில் நடக்கவிருக்கும் திருக்குறள் மாநாட்டுச் சார்பில் வெளியூர் பொதுமக்கள், புலவர், மாணவர் ஆகியோருக்கு கட்டுரைப் போட்டி மட்டும் நடத்தப்பெறும். போட்டியில் கலந்து கொள்வோர் போட்டிக் கட்டணமாக ரூபாய் ஒன்று மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்; 'திருக்குறளும் பொதுமையும்' என்ற பொருள் பற்றி முழுப் பக்க அளவில் 12 பக்கங்களுக்கு மிகாமல் எழுதித் தபால் மூலம் 30-4-55க் தேதிக்குள் 'செயலாளர், திருக்குறள் மாநாடு, நகரசபை உயர்நிலைப்பள்ளி, டாஸ்டர் டவுன், பெங்களூர்-1' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்; கவிதை, நாடகம் முதலியன ஏற்கப்படமாட்டா" என்று மேற்படி மாநாட்டுப் போட்டி அமைப்பாளர் தோழர் இராச. இராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

முடி சூடி, கொடி கட்டி நாடாண்ட பரூக்-அன்று மன்னவன்!

முகம் வாடி பணி தேடி அலையும் பரூக் - இன்று பராரி!

ரோம், ஏப். 16—

அவன் மன்னன்—எகிப்திய நாட்டிற்கு, ஒருகாலத்தில்—இந்தத் தலைமுறையில்தான்!

பொன்னும் பொருளும், போக போக்கியமும், கொட்டிக் கிடந்தன அவன் காலடியில் — அந்த நாட்களில்!

பளிங்கு மாளிகையில், பவழ மேனியன் நாரீமனுடன், நாட்களுக்கு 'இன்ப நிறம்' பூசிக்கொண்டிருந்த அந்த மன்னன்தான்—பரூக்

ஆனால் இன்று!

காலம் மாறிவிட்டது—மன்னனல்ல, முதலில் அவன்! பின், அவனிடம், மாளிகையும், அங்கு கிடைக்கும் மந்தகாச வாழ்வும் இருக்க முடியாது. 'இராணியாயிருந்த நாரீமனுக்கு மட்டும் இனி அவனுடன் என்ன வேலை? கைவிட்டாள்-கைபிடித்த அவனை!

இன்று, பரூக், என்ன நிலையிலிருப்பதாக இத்தாலி நாட்டு வார இதழ் ஒன்று கூறுகிறது தெரியுமா?

மன்னனாயிருந்த பரூக், இன்று மனமுடைந்த நிலையில், தன் வாழ்வின் எஞ்சிய நாட்களைக் கழிக்க, எங்கேனும் வேலை கிடைக்குமா எனத் தேடியலைகிறாராம்; என்றாலும், 'மன்னனாயிருந்தவனாயிற்றே, எப்படி ஏவலாளியாய் ஏற்றுக்கொள்வது,' என்று தயங்குகின்றனராம், சில இத்தாலி நாட்டு 'இராஜதாச' பரம்பரையினர்!

இத்தகவலை 'டெம்போ' (காலம்) என்ற இத்தாலி வார இதழ் தந்திருக்கிறது.

துள்ளித் திரியும் பருவத்திலிருந்தது முதல், முடிசூடி, கொடி கட்டி, மன்னராகி நாடாண்டு, பின் நாடிழந்து, பதவி பறிக்கப்பட்டு, இத்தாலியில் 'தஞ்சம்' புகுந்துள்ள இன்றுவரையில் பரூக்கின் வாழ்க்கையைப்பற்றி விரிவாக லெல்லோ பேர்சானி என்பவர் அந்த இதழில் எழுதியுள்ள கட்டுரையில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

பரூக், இத்தாலிக்கு வரும் போது 600 பவுன்களுடன் மட்டும் வந்ததாயும், தான் பதவி இழந்த நேரத்தில், தனக்கு வெளிநாட்டில் இருந்த சொத்துக்களோ, தன்னிடமிருந்த விலையுயர்ந்த நகைகட்டுகளோ தனக்குக் கிடைக்கவில்லை என்றும் பரூக் கூறியதாக, பேர்சானி, அக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தான் பதவியிழந்தாலும், முகம் மதியப் பெருமகன் ஒருவரது உதவியால்தான், பழைய 'அரண்மனை வாழ்வு' போன்றதொரு வாழ்வு சிறிது காள் நடத்த முடிந்தது என்றும் அவர் கூறியதாகவும் பேர்சானி தெரிவிக்கிறார்.

கிராமச் சாலை அமைப்பு

உயர்நிலைப்பள்ளி மாணவர் சமூக சேவை

பென்னாகடம் கழக உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர், ஊராளு மன்றத் தலைவர் ஆகியோர் முயற்சியால், கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 200 பேர்களும், பழைய மாணவர்களும், ஆசிரியர் 20 பேர்களுமாகச் சேர்ந்து பல குழுக்களாகப் பிரிந்து, 10, 11, 12—4—55 ஆகிய 3 நாட்களில், சுமார் 1,500 அடி நீளம் உள்ள சாலை ஒன்றை அமைத்தனர். மூன்றும் நாள் மாலை பிரமுகர்கள் பலர், மாணவர்களின் சேவைபற்றி பாராட்டிப் பேசினர்.

ஏரல் திருக்குறள் மன்ற ஆண்டு விழா

10—4—55 மாலை 6 மணிக்கு மன்ற ஆண்டு விழா, தோழர் பாரதிதாசன் தலைமையில் நடந்தது. தோழர்கள் திருமாவளவன் கணபதி, மா. இராசமாணிக்கனார், ஆகியோர் குறள்பற்றி விளக்கவுரை ஆற்றினர். தோழர் இல. அறவேந்தன் தமிழ்க்கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

மஜீத் மன்றம்

சென்னை 12-வது வட்ட மஜீத் மன்ற முதலாண்டு விழாவும், பேராசிரியர் சுந்தரம் நூற்றாண்டு விழாவும் 10—4—55 மாலை 6 மணிக்கு சென்னை மல்லீஸ்வரர் கோவில் திடலில் தோழர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ருக்மாங்கதன், பெருமாள், வெ கி. பார்த்தசாரதி ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றிய பின், தோழர் கண்ணதாசன் 'மனோன்மணீயமும், அதன் ஆசிரியரும்' என்பது பற்றி உரையாற்றினார்.

பிரம்பை அழகிரி நினைவு மன்றம்

11—4—55 மாலை, தோழர் க. சிதம்பரம் தலைமையில் மேற்படி மன்றத் தேர்தல் நடைபெற்றது செயலாளர்: சு. திருநாவுக்கரசு; துணைச் செயலாளர்: அரங்கநாதன்; பொருளாளர்: அ. இராமச்சந்திரன்; மற்றும் 5 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'முயற்சி'-3-வது ஆண்டு விழா

10—4—55 மாலை 6½ மணிக்கு, பம்பாய் தி. மு. கழகத்தின் திங்கள் இதழான 'முயற்சி'யின் மூன்றுவது ஆண்டு விழா, தோழர் நாஞ்சில் இராசாமணி தலைமையில் நடைபெற்றது. தோழர் சு. தங்கவேலன் 'முயற்சி' ஆண்டு மலரைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர் தோழர்கள் தனிக்கொடி, த. மு. பொற்கோ, சு. வள்ளிநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெயர் மாற்றம்

'தென்றல்' அலுவலகத் தோழர் வி. கரு. இராமநாதன் அவர்கள், இனி 'மலையமான்' என அழைக்கப்படுவார். பெயர் மாற்ற விழாவில் தோழர்கள் தென்னரசு, சுப. முத்துராமன், தமிழ்ப்பித்தன் செல்லப்பாண்டியன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

‘சம்மேளனத்தின் சாய்ந்த தூண்!’

சிவராஜ் பற்றி அம்பேத்கார் வர்ணனை

பம்பாய், ஏப். 16—

“தென்னிந்தியாவிற்கென தனியாக ஒரு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் துவங்க வேண்டுமென என். சிவராஜ் கூறியிருக்கிறார்; இதற்கு என்ன அவசியமிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை; தோழர் சிவராஜ், எப்பொழுதுமே சம்மேளனத்தின் ‘சாய்ந்த தூணா’கவே இருந்து வருகிறார்.”

“தோழர் பி. என். ராஜ்போஜ், அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்தது எனக்கொன்றும் அதிர்ச்சியையோ, ஆச்சரியத்தையோ தரவில்லை,”—என்று, டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் கூறுவதாவது:— “ராஜ்போஜ் கடந்த 10 ஆண்டுகளாக சம்மேளனத்தின் செயலாளராயிருந்து வந்திருக்கிறார்; இந்த 10 ஆண்டுகளில் அவர் உருப்படியான காரியங்கள் ஏதேனும் செய்தார் என்பதற்கு எள்ளவும் எடுத்துக்காட்டும் இல்லை.

“கடந்த 10 ஆண்டுகளில் எவ்வளவு பணம் திரட்டினார்—எவ்வளவு செலவு செய்தார்—எதற்கும் கணக்கு வழக்கில்லை. இதை எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்துக்கொள்ள முடியும்?

“சம்மேளனத்தின் பெயரைக் கூறி, மக்கள் சபை உறுப்பினரானார்; உடனே ஜப்பான், துருக்கி, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா—இப்படியாக சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டார். இவை எவற்றிற்கும் என்னையோ, தோழர் சிவராஜையோ அவர் கலந்தாலோசிக்கவே இல்லை. ஒவ்வொரு முறை வெளிநாடு சென்று திரும்பியதும், தன்னை வரவேற்க ஏற்பாடு செய்யுமாறு சம்மேளனத்திற்கு கட்டளையிட்டிருக்கிறார்; இவற்றையெல்லாம் சம்மேளனத்தின் பெயரைக் கூறி அவர் செய்வது பொறுத்துக்கொள்ள முடியாததாகும்; மேலும், மக்கள் சபையிலும் அவர் சம்மேளனத்திற்காக வேலை எதுவும் செய்யவில்லை.

“1942ல், சம்மேளனம் துவக்கப்பட்டபோது, அதன் தலைவராக நான்தான் முதல் முதலில் இருந்தேன்; பின்னர், நான் வைசிராய் கவுன்சில் உறுப்பினரானபோது அந்தப் பொறுப்புகளை தோழர் சிவராஜிடம் நான்தான் ஒப்படைத்தேன்; தோழர் சிவராஜ் அவர்களை எவரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கவில்லை.

பின்னர், 1952-ல், சென்னை மாநில சம்மேளனத் தலைமையிலிருந்தும், மத்திய தலைமையிலிருந்தும் அவரை நீக்குமாறு கோரி சம்மேளன நிர்வாகக் குழு இரு தீர்மானங்களை நிறைவேற்றியது.

“இந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி, என்னைப் பொறுப்பேற்குமாறு வற்புறுத்தியது — வேறு யாருமல்ல—தோழர் ராஜ்போஜ் தான்.

“எனவே, தோழர் சிவராஜ் ராஜினாமா செய்யவில்லை; எவர் பொறுப்பிலிருந்தாலும் காரியங்களை நான்தான் கவனிக்க வேண்டியிருந்தது என்பதால், தோழர் சிவராஜை ராஜினாமாச் செய்யுமாறு நான் கேட்கவில்லை.

“அப்படியிருக்க, ‘தென்னிந்தியாவிற்கு என தனியாக ஒரு சம்மேளனம் வேண்டும்,’ என்று ஏன் தோழர் சிவராஜ் எண்ண வேண்டும்? அகில இந்திய சம்மேளனத்தின் தலைமையை நான் அவரிடம் தந்துவிடத் தயாராயிருக்கிறேன்; அவருக்கு நிறுவனத்தை நடத்திச் செல்லும் துணிவிருந்தால் அவர் முன்வரட்டும்.

“சிவராஜை பின்பற்றுபவர்கள் இருக்கிறார்களா? தோழர் சிவராஜ், தானும் காரியங்கள் செய்யமாட்டார்; பிறரையும் எதையும் செய்யவும் விடமாட்டார்; இப்படிச் சொல்வதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.”

10,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

கோலார் தங்கவயல் நிர்வாகிகள் நடத்தைக்கு எதிர்ப்பு

ராபர்ட்சன்பேட்டை, ஏப். 17—

கோலார் தங்கவயல் சுரங்கங்களிலுள்ள சாம்பியன் ரீப், மைசூர் சுரங்கக் கம்பெனி ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 10,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனராம்.

‘டன்பாத் டிரிபியூனல்’ விதித்திருந்த தீர்ப்பை மேற்படி கம்பெனி நிர்வாகிகள் அமுல் நடத்தாததை ஆட்சேபித்தே அவர்கள் இவ்வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

20 லட்சம் பேர் வேலையற்று விடுவராம்

பம்பாய், ஏப். 16—

“கால்நடை வதைத் தடை பற்றி மாநிலங்கள் நிறைவேற்றியுள்ள சட்டங்களை அமுல் நடத்துவதானால், அதனால் 20 லட்சம் பேர் துன்பமடைய நேரிடும்; எனவே, இப்பிரச்சினையை பொருளாதார நோக்குடன் கவனிக்கவேண்டும்.”

இவ்வாறு, இங்கு நடைபெற்ற அ. இ. கசாப்புக் கடைக்காரர் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தடையேதுமில்லை!

“இரத்தக் கொதிப்பிற்கு மருந்தாக உபயோகிக்கப்படும் ‘ரவுல்வியா சர்ப் பண்டினா’ எனும் மூலிகை ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்யும் நோக்கம் எதுவும் சர்க்காருக்கு இல்லை,”

என்று, மக்கள் சபையில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

வட இந்தியப் பத்திரிகையாளர் முறைப்பு

அதிகாரிமீது அபாண்டம்

விசாகப்பட்டினம், ஏப். 16—

இந்தியப் பேரரசின் அழைப்பின் பேரில்,இந்தியாவின் மத்திய, தெற்கு மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்து வரும் 10 வட இந்திய எழுத்தாளர்கள், ஆந்திராவிலுடைய மிகப் பெரிய மின்சாரத் திட்டமான மச்கந்த் திட்டத்தைக் காண மறுத்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இதற்குக் காரணமாக அவர்கள், தங்கள் மனம் புண்படும்படியாக அதிகாரிகள் நடந்துகொண்டது தான் என்று கூறுகின்றனராம்.

இதற்கு முன், அவர்கள், நடுக்காட்டில், காடு ஒன்றில் தங்கவிடப்பட்டனராம். இந்த பத்திரிகையாளர்களுக்கு அந்த நடு இரவில் உதவி செய்ய அருகிலிருந்த பங்களாவில் தங்கியிருந்த திட்டக் குழுவின் ஆலோசகரான ஜெனுமாடி என்பவர் மறுத்துவிட்டாராம்.

இத்தபத்திரிகையாளர்கள்முறையீடு பற்றி கேள்விக்கான, திட்டம் பற்றி கேட்டதன் விளைவாகவே தாங்கள் அதிகாரி அவர்களுக்கு அந்த மறுத்தாராம்.

கழகக் கூட்டங்கள்

★

மண்பறை

திரு. வி. க. மைதானத்தில்
20—4—55 மாலை 7 மணிக்கு
தலைவர்: சி. பசவலிங்கம்
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

தேவகோட்டை

ஆர்ச் நேதாஜி சதுக்கத்தில்
20—4—55 மாலை 7 மணிக்கு
தலைவர்: சுரு. இலக்குமணன்
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

திருத்தணி பழைய மாணவர் மன்றம்

19—4—55 மாலை 6½ மணிக்கு, திருத்தணியில், மேற்படி மன்றச் சார்பில், தோழர் திருஞான சம்பந்தம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், தண்டாயுதபாணி கோவிந்தசாமி ஆகியோர் பேசுவர்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

★

ஏப். 20: மண்பறை
21: அம்மாப்பேட்டை (தஞ்சை)
22: சித்தக்காடு
23: வலங்கைமான்

மேற்கத்திய வல்லரசுகள் மீது ரஷ்யா குற்றச்சாட்டு

ம. கி. நிலைபற்றி ஐ. நா.-வில் முறையிடுமாம்

“மத்தியக் கிழக்கு நாடுகளின் கடந்த சில ஆண்டுகளின் நிலை மிகவும் படுமோசமாகி வருகிறது; இராணுவக் கூட்டணிகளில், இந்தப் பகுதியில் உள்ள நாடுகளை மேற்கத்திய வல்லரசுகள் சேர்ப்பதற்கு முயற்சித்து வருவதுதான் இந்தப் படுமோசமான நிலை உருவாவதற்குக் காரணமாகும்,”

என்று, சோவியத் வெளிவிவகார இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

“இந்தப் பகுதியில் உள்ள நாடுகளிடம் மேற்கத்திய வல்லரசுகள், தங்களின் நிர்ப்பந்த, அச்சுறுத்தல் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்களானால், ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகளின் நிலையை ஐ. நா. சபையில் முறையிடும்” என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

“மத்தியக் கிழக்கில் உருவாகி வரும் இந்த நிலை கண்டு ரஷ்யா வாளாவிருக்க முடியாது; ஏனெனில், இந்தப் பகுதிகளில் அமைக்கப்படும் இராணுவத் தளங்கள், ரஷ்யப் பாதுகாப்புடன் நேரடியான தொடர்பு கொண்டவை என்பதால்,” என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

“தென் கிழக்கு ஆசிய நாடுகளையும் மத்திய கிழக்கு நாடுகளையும் இராணுவக் கூட்டணிகளில் சேர்ப்பதின் மூலம், அவற்றைக் காலனிகளாக்கி அடிமை கொள்ள மேற்கத்திய வல்லரசுகள் முயற்சிக்கின்றன,” என்றும் அந்த அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் வெற்றி!

எட்டு மாத ‘போனஸ்’ தர ஆலை நிர்வாகிகள் ஒப்பம்!

சென்னை மந்திரி நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலன்

மதுரை ஆர்வி பஞ்சாலைத் தொழிலாளர்கள் தங்களின் ‘போனஸ்’ கோரிக்கையில் வெற்றி பெற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது.

இதுபற்றி ஆலை நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையில் இருந்துவந்த தகராறு முடிவுற்றது.

மேற்கொண்டுள்ள முடிவுப்படி, சுமார் 25,000 தொழிலாளர்களுக்கு, 1953, 1954-ம் ஆண்டுகளுக்கான எட்டு மாத அடிப்படை சம்பளம் ‘போனசா’கக் கிடைக்கும்.

ஆலை நிர்வாகிகள் சுமார் ரூ. 61 லட்சம் வரை பட்டுவாடா செய்வர் என்று தெரிய வருகிறது.

இந்த முடிவுகள், ஆலை நிர்வாகிகளின் பிரதிநிதிகள், தொழிலாளரின் பிரதிநிதிகள் ஆகியோருடன் சென்னை மந்திரி எம். பக்தவத்சலம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனும் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிகிறது.

அரும்பும் அமைதி மலரட்டும்!

பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல் மேலும் அதிகாரங்களை மேற்கொள்ளுகிறார்

கராச்சி, ஏப். 17—

பாகிஸ்தானில் அரசியல் நிர்வாகம் சீர்குலைந்து விடாமல் இருப்பதற்காக, பெடரல் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் செல்லாமற்போன சட்டங்களையெல்லாம் மீண்டும் செல்லுபடியாக்கத் தேவையான அதிகாரங்களை பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் மேற்கொண்டிருக்கிறார்.

அடுத்த திங்கள் 10-ந் தேதியன்று முதல், இது சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்ள அரசியல் நிர்ணய சபை கூடுகிற வரையிலும், கவர்னர் — ஜெனரல் இந்த அதிகாரங்களை வகிப்பார் என்று தெரிகிறது.

அவசர கால அதிகார அவசரச் சட்டத்தில் கண்டுள்ளபடி, அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றியுள்ள 35 சட்டங்களும் செல்லும் என்று கவர்னர்—ஜெனரல் அங்கீகாரம் அளித்துள்ளதாக சர்க்கார் அறிவிப்பொன்று தெரிவிக்கிறது.

கிழக்கு வங்கம், பஞ்சாப், சிந்து கவர்னர்கள் பிறப்பித்துள்ள சில சட்டங்கள் செல்லுமென்றும், மற்றும் சில மாநில சட்டங்கள் செல்லாதா என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் மற்றும் இரண்டு அவசர காலச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

‘இரத்தக் கண்ணீர்’ நாடக எதிரொலி

11 பேர்கள் கைது

மதுரைக்கு அருகில் உள்ள குமரம் எனும் கிராமத்திற்கு அருகில் இந்த மகாசபையைச் சேர்ந்தவர்களென்று கருதப்படும் 11 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

குமரம் கிராமத்தில் 17-ந் தேதியன்று இரவு தோழர் எம். ஆர். இராதா அவர்களின் ‘இரத்தக் கண்ணீர்’ நாடகம் நடைபெற்ற போது, அந்நாடகத்தை ஆட்சேபித்து, அதனை நடத்தவிடாமல் மறியல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்படி 11 பேரும் சென்றுகொண்டிருக்கையிலேயே போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

‘காஷ்மீர் இளவரசி’ விபத்துக்குக் காரணம்?

தப்பிப் பிழைத்தவர்கள் கூறும் திடுக்கிடும் தகவல்

பம்பாய், ஏப் 17—

தென் சீனக் கடலில் சரவாக் கிற்கருகில் விழுந்து நொறுங்கிய ‘காஷ்மீர் இளவரசி’ எனும் ஏர் இந்தியா இண்டர் நேஷனல் கம்பெனியைச் சேர்ந்த விமான விபத்தில் தப்பிப்பிழைத்த 3 பேர், அந்த விமான விபத்திற்குக் காரணமாக இருந்த வெடி அதிர்ச்சியும், நெருப்பும், வெளி இடம் ஒன்றிலிருந்துதான் — விமான அமைப்பில் சம்பந்தப்படாத வேறொரு இடத்திலிருந்து தான் உண்டாயிற்று என்று தெரிவித்திருக்கிறார்களாம்.

விமானத்தின் என்ஜினிலோ, அல்லது அதற்கு உபயோகிக்கப்படும் எரிபொருளிலோ, அல்லது வேறு எந்த இயந்திர உறுப்புகளிலுள்ள கோளாறினாலோ வெடி அதிர்ச்சியும், நெருப்பும் உண்டாகவில்லை என்று அம்மூவரும் கருதுகின்றனராம்.

மனிதரை மனிதர் இழுக்கும் அவல நிலை

பெங்களூரில் ஒழிக்கப்படுகிறது

மனிதர்களை ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு மனிதர்களே இழுத்துச் செல்லும் அவல நிலையை ஒழிப்பதற்கு பெங்களூர் நகரசபை முடிவு செய்துள்ளது.

ரிக்ஷாக்களை ஒழிப்பதற்கான வகையில் சட்டங்களைத் திருத்துவதற்கான நகரசபை கமிஷனரின் குறிப்புகளையும் சபை அங்கீகரித்துள்ளது.

காங்கிரசில் சேர எண்ணுகிறாராம்!

பூனா, ஏப். 16—

அண்மையில் அகில இந்திய தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக இருந்து வந்த பி. என். ராஜ்போஜ் மீண்டும் காங்கிரசில் சேர்ந்துவிட எண்ணியுள்ளார்.

காங்கிரசில் சேர்ந்துவிடுவதற்கு முன்னர், தமது முடிவு பற்றி தமது ஏனைய தோழர்களிடம் கலந்தாலோசிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பாக். நாணயம் விளைவித்த வம்பு!

கல்கத்தா, ஏப். 16—

பாகிஸ்தான் செலாவணியில் இல்லாத ஒரு அணா நாணயத்தின் மீது ஏற்பட்ட தகராறு, ஒரு பஸ் கண்டக்டருக்கும் — பிரயாணிகளுக்குமிடையே சச்சரவை ஏற்படுத்தி, அதனால் 40 பேர்கள் வரை கைது செய்யப்படவேண்டிய நிலைமை கல்கத்தாவில் நடைபெற்றிருக்கிறது!

பஸ் கண்டக்டர் ஒருவர், தம்மிடம் பஸ் பிரயாணி ஒருவர் தந்த பாகிஸ்தான் செலாவணியில் இல்லாத அணா நாணயம் ஒன்றை ஏற்றுக்கொள்ள மறுத்ததின் பேரில், கண்டக்டருக்கும்—பஸ் பிரயாணிகளுக்குமிடையே தகராறு வளர்ந்துவிட்டிருக்கிறது. தகராறு நீடித்து, கைகலப்பிலும், கல்வீச்சிலும் வந்திருக்கிறது. பிறகுதான் போலீசார் வந்து 40 பேரைக் கைது செய்து அமைதியை நிலைநாட்டியிருக்கின்றனர். இக்கலவரத்தின் விளைவாக சுமார் 6 பேர் வரையிலும் இலேசாகக் காயமுற்றனர் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில், 1,10,000 சதுர மைல் கடல் பிரதேசம் மீன் பிடிப்பதற்கு ஏற்ற பிரதேசமாக இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.